செய்திக்குறிப்பு எண்.97 நாள்-4-12-09

<u>மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் உரை</u>

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி விரைவாக ஏற்பட ஏதுவாக மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களால் துரித நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டு உள்ளன. மாண்புமிகு துணை முதல்வர் அவர்களின் நடவடிக்கைகளுடன் ஒன்றிணைந்து செயல்பட தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும், தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் நிறுவ விரும்பும் தொழில் முனைவோருக்கு இசைவாணைகளை விரைவாக வழங்க உரிய நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. இந்த வகையில் ஒரு மாத காலத்திற்குள் இசைவாணை விண்ணப்பம் மற்றும் இசைவாணை வழங்குதல் அனைத்தும் கணினி மயமாக்கப்பட்டு இணையத்தின் மூலமாக செயல்படும்.

நான் சுற்றுச்சூழல் துறையின் 2009 – 2010 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் போது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்கும் முன் வாரியம் அமுல்படுத்தும் விதிகளின் கீழ் பெற வேண்டிய ஒப்புதல் / அனுமதிகள் ஆகியவற்றை எளிதாகவும் விரைவாகவும் பெற வாரிய தலைமை அலுவலகத்தில் உதவி மையம் ஒன்றை ஏற்படுத்தும் என அறிவித்திருந்தேன். அதன் அடிப்படையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இந்த உதவி மையத்தை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 3 மாவட்டங்களில், அரும்பாக்கம், அம்பத்தூர், திருவள்ளூர், படப்பை, மற்றும் மறைமலை நகர் ஆகிய

1/3

ஐந்து இடங்களில் உள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய மாவட்ட அலுவலகங்கள் மூலமாக மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் அமைய உள்ள தொழிற்சாலைகளுக்காகவும், இந்த உதவி மையம் ஒற்றைசாளர அமைப்பாக செயல்படும். அனைத்து தொழிற்சாலைகளும் விண்ணப்பங்களை சென்னையிலுள்ள வாரிய தலைமை அலுவலகத்திலுள்ள ஒற்றைசாளர உதவி மையத்தில் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கவும், சம்பந்தப்பட்ட சட்ட திட்டங்கள், விதிமுறைகள் எளிதில் புரிந்து கொள்ள அனைத்து உதவிகளையும் இந்த உதவி மையம் வழங்கிடும். விண்ணப்பங்களை புரிந்து கொண்டு பூர்த்தி செய்யவும் தேவையான ஆவணங்களை இணைக்கவும், உரிய உதவி அளிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உதவி மையத்தில் பெறப்பட்டு ஒப்புதல் / இசைவாணை கீழ் குறிப்பிட்டுள்ள கால அளவுக்குள் உதவி மையத்தின் மூலமாகவே வழங்கப்படும்.

| வரிசை எண். | தொழிற்சாலைகளின் வகை | குறித்த கால அளவு |
|---|---|---|
| 1 | சிவப்பு | 30 நாட்கள் |
| 2 | ஆரஞ்சு | 15 நாட்கள் |
| 3 | பச்சை | 10 நாட்கள் |

நீர் மற்றும் காற்று மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டங்களின்படி வாரியம் விண்ணப்பம் பெற்ற நாளிலிருந்து 120 நாட்களுக்குள் இசைவாணை வழங்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தாலும், வாரியம் மேற்குறிப்பிட்ட

213

அட்டவணையில் கூறியபடி கால அளவினை அதிகாரிகளுக்கு விதித்து உதவி மையம் மூலம் விரைவாக இசைவாணை வழங்க வெறும் 30 நாட்களுக்குள் கால அளவாக நிர்ணயித்துள்ளது சிறப்பு அம்சமாகும். தொழிற்சாலைகளால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் முழுமையாக இருக்குமேயானால், தேவையான அனைத்து அலுவலகப்பணிகளும் உரிய கால அளவுக்குள் செய்து முடிக்கப்படும். இசைவாணை/ஒப்புதல் குறிப்பிட்ட கால அளவுக்குள் பெறுவதில் தொழிற்சாலைகளுக்கு எவ்வித சிரமமும் ஏற்படாது.

இந்த உதவி மையமானது நல்ல சூழலில் கணினிமயம் ஆக்கப்பட்டுள்ளதோடு வாரியத்தலைவர் மற்றும் உறுப்பினர் செயலர் அவர்களின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும்.

இதன் மூலம், இம்மூன்று மாவட்டங்களில் புதிதாக தொழிற்தொடங்குவோர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணையினை எளிதிலும், எந்தவித சிரமமின்றியும் பெற்று தொழில் துவங்க உதவியாக செயல்படும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இந்த உதவி மையம் சிறப்புற செயல்பட எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இதனுடன் பார்வையாளர்களின் வசதிக்கென புதிய வரவேற்பு மையம் கணிணிமையமாக்கப்பட்டு பார்வையாளர்களின் வருகை கண்காணிக்கப்படவுள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

3/3